கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கும்பகோணம்

**முன்னிலை: திருமதி. J. பரிமளா, பி.எஸ்.சி., பி.எல்.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, கும்பகோணம்.**

2026–ம் ஆண்டு ஜூலை திங்கள் 23ம் நாள் வியாழக்கிழமை

திருவள்ளுவராண்டு 2056 ஸ்ரீ பராபவ வருடம் ஆடி திங்கள் 07–ம் நாள்

**இடைநிலை மனு எண்.10/2026**

**இன்**

**அசல் வழக்கு எண்.140/2024**

1. ஸ்ரீராம்
2. ஸ்ரீகாந்த்
3. ராஜலெட்சுமி .. மனுதாரர்/3ம் நபர்கள்

/ எதிர்/

சங்கர் கணேஷ் ...எதிர்மனுதாரர்/வாதி

இராதாகிருஷ்ணன் ...எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இந்த மனு என் முன்பாக 04.07.2026–ஆம் தேதி இறுதி விசாரணைக்கு வந்து மனுதாரர்/3ம் நபர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M. சௌந்தரராஜன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. அண்ணாதுரை அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும். . .

<u>உத்தரவு</u>

இம்மனுவானது மனுதாரர்/3ம் நபர்களை இந்த வழக்கின் வாதுரையிலும், இடைமனுவிலும் தரப்பினராக சேர்த்து உத்தரவுகோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. <u>மனுவின் சுருக்கம்</u>:

**2(1)** இம்மனுவின் 2ம் மனுதாரர் அசல் வழக்கில் பார்ட்டி அல்ல 3வது நபர். இதர மனுதாரர் 2ம் மனுதாரரது சகோதர, சகோதரி ஆவார்கள். மேற்படி அசல் வழக்கில் கண்ட தாவா சொத்தானது 2ம் மனுதாரரது அத்தையும், தந்தையார் கிருஷ்ணமூர்த்தி அவர்களின் சகோதரியுமான இராசாத்தி அம்மாள் என்பவருக்கு உரிமையுடைய சொத்தாகும். தாவா சொத்தை இராசாத்தி அம்மாள் கடந்த 22.12.1966 தேதியன்று விஸ்வநாத அய்யர் வகையறாவிடமிருந்து கிரயம் பெற்ற சொத்தாகும். தாவா சொத்தை மேற்படி இராசாத்தி அம்மாள் கிரயம் பெற்று அவரது அனுபவத்திலும், சுவாதீனத்திலும், உரிமையிலும் வைத்து அனுபவித்து வந்துள்ளார். மேற்படி இராசாத்தி அம்மாள் கல்கத்தாவில், மாநில தலைமை

J.Parimala Digitally signed by J.Parimala

செயலகத்தில், மூத்த முதல்நிலை அதிகாரியாக பணிபுரிந்து, 1998 ம் வருடத்தில் பணி ஓய்வு பெற்ற பிறகு, தாவா சொத்தில் நிரந்தரமாக வசித்து வந்தார். தாவா சொத்தை பொருத்து மேற்படி இராசாத்தி அம்மாள் அவர்கள் பெயரில் ஏற்பட்ட பட்டா, சிட்டா, அ-பதிவேடு, வீட்டுவரி ரசீதுகள், மின்கட்டண ரசீதுகள், ஆதார் அடையாள அட்டை ஆகிய ஆவணங்கள் ஏற்பட்டுள்ளனர்.

**2(2)** மேலும் தாவா சொத்தில் வசித்து வந்த இராசாத்தி அம்மாளின் கணவர் சுந்தர்ராமன் அவர்கள் கடந்த 25.12.2007 தேதியன்று வயது மூப்பின் காரணமாக காலமாகிவிட்டார். இராசாத்தி அம்மாள்-சுந்தரராமன் தம்பதியருக்கு எந்தவித வாரிசும் ஏற்படாத நிலையில், மேற்கண்ட சுந்தர்ராமன் இறப்பிற்கு பிறகு, இராசாத்தி அம்மாள் தனிமையில் வசித்து வந்தார். இராசாத்தி அம்மாளின் வயோதீகத்தின் காரணமாக இவ்வழக்கின் 3 ம் நபர் பல சந்தர்ப்பங்களில் அவருடனேயே தங்கி வந்தார். 2 வது மனுதாரர் சமையல் கான்ட்ரெக்ட் வேலை செய்து வருவதால், அவரது பணியின் காரணமாக சில தருணங்களில் வெளியூர் சென்றுவிடுவார். அந்த நேரத்தில் இராசாத்தி அம்மாளின் அண்ணன் மகனான 2 ம் மனுதாரர் உடனிருந்து அவரை பராமரித்து வந்தார். மேற்படி இராசாத்தி அம்மாள் கல்கத்தா தலைமை செயலகத்தில், உயர் பதவியில் இருந்ததால், அவரது பெயரில் பல அசையா சொத்துக்களும், வீட்டில் சுமார் 100 சவரனுக்கு மேற்பட்ட தங்க நகைகளும், 40 கிலோ வெள்ளி பொருட்களும், சுவாமி தரிசனத்திற்காக 1 அடி உயரத்தில் ஐம்பொன் காளி சிலையும், இதர பல பொருட்களையும் வீட்டில் வைத்திருந்தார். மேலும் ஒவ்வொரு மாதமும், ரூ.40,000/- திற்கும் மேல் பென்ஷன் தொகையாக பெற்று கடந்த 20 வருடங்களாக ரூபாய ஒரு கோடிக்கும் மேல் ஒரு பெரிய கையிருப்பு தொகையையும், அவரது பீரோவில் வைத்திருந்தார். இந்த விவரங்களை தெரிந்துக்கொண்ட இவ்வழக்கின் வாதியும், அவரது மனைவி பத்மாவதியும், மேற்படி இராசாத்தி அம்மாள் வீட்டின் எதிர் வீட்டில் குடியிருந்து வருவதை தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டும், இராசாத்தி அம்மாள் தனிமையில் இருந்து வருவதை தெரிந்துக்கொண்டு, மேற்கண்ட தொகையையும், பொருட்களையும் அபகரிக்கும் நோக்கத்தோடு, அடிக்கடி ராசாத்தி அம்மாளின் வீட்டிற்கு வாதியின் மனைவியும், சென்று வந்து இராசாத்தி அம்மாளுடன் இணக்கமான பழக்கத்தை ஏற்படுத்த முயற்சி செய்துள்ளனர். ஆனால் இராசாத்தி அம்மாள் ஆச்சாரமாண பிராமண பெண் என்பதால், வாதியையும், அவரது மனைவியையும் வீட்டிற்குள் பல தருணங்களில் அனுமதிக்கவில்லை.

**2(3)** 2 ம் மனுதாரரும், அவரது அத்தை மகனான நடராஜன் என்பவரும் பணியின் நிமித்தமாக வெளியூர் செல்லும் நேரங்களில் ராஜாத்தியம்மாளை கவனித்து வருவதற்காக ராஜேஸ்வரி என்பவரையும், முருகன் என்பவரையும் பணிக்கு அமர்த்தினார். 2 ம் மனுதாரரும் மேற்கண்ட நடராஜன் என்பவரும், வெளியூர் செல்லும் நேரங்களில் வாதியும், அவரது மனைவியும், மேற்கண்ட ராஜேஸ்வரி முருகன் என்பவர்களை மிரட்டிவிட்டு, மேற்படி இராசாத்தியம்மாள் வீட்டிற்குள் அடிக்கடி சென்று வந்துள்ளனர். மேற்படி வாதி மற்றும் அவரது மனைவியின் செயல்களை ராஜேஸ்வரி, முருகன் இருவரும் என்னிடமும், மேற்கண்ட நடராஜனிடமும் தெரிவித்ததால், 2 வது மனுதாரரும், அத்தை மகன் நடராஜன் வாதியையும், அவரது மனைவியையும் சந்தித்து 2 ம் மனுதாரரது சித்தி வீட்டிற்குள் ஏன் அடிக்கடி வருகிறீர்கள் என்று கேட்டதற்கு, வாதியும், அவரது மனைவியும், சேர்ந்து அவரை மிரட்டினார்கள். மேற்கண்ட விவரத்தை அவர் 2 ம் மனுதாரரிடம் தெரிவித்தார். மேற்படி

J.Parimala Digitally signed by J.Parimala

வாதியும், அவரது மனைவியும் ஒரு கட்டத்தில் ஆட்களை வைத்துக்கொண்டு 2ம் மனுதாரரையும், அவரது அத்தை மகன் நடராஜன் என்பவரையும், பிரச்சனை செய்து, மேற்படி ராசாத்தி அம்மாளின் வீட்டிலிருந்து கடந்த 2021 ம் ஆண்டு வெளியேற்றி விட்டனர். வாதியின் மிரட்டலுக்கு பயந்து வாதிக்கும் அவரது மனைவிக்கும் தெரியாமல், ராஜேஸ்வரி, முருகன் அவர்கள் துணையுடன் 2ம் மனுதாரரும், நடராஜனும் இராசாத்தி அம்மாளை அடிக்கடி பார்த்து வந்தார். மேலும் 2ம் மனுதாரரது அத்தை இராசாத்தி அம்மாள் மேற்கண்ட பணியாட்களின் உதவியுடன் தனிமையில் வசித்து வந்த நிலையில், 2ம் மனுதாரர் கட்சேரி காரணமாக கடந்த 16.12.2021 தேதியில் வெளியூரில் இருந்தபோது, 2ம் மனுதாரரது அத்தை மகன் நடராஜன் 2ம் மனுதாரருக்கு போன் மூலமும் தொடர்பு கொண்டு நாச்சியார்கோவில் காவல் ஆய்வாளர் ரேகாராணி அவர்கள் போன் பேசினார்கள் என்றும், உங்களது சித்தி இராசாத்தி அம்மாளின் வீட்டை சுற்றி துர்நாற்றம் வீசுவதாக வாதி கூறினார் என்றும், அதனால் வீட்டின் பூட்டை உடைத்து உள்ளே சென்று பார்த்த பொழுது இரத்த வெள்ளத்தில் காயங்களோடு இராசாத்தியம்மாள் இறந்து கிடந்ததாகவும், அதனால் உடனடியாக அடக்கம் செய்ய வேண்டும் என்றும், 2ம் மனுதாரரிடம் நாச்சியார்கோவில் காவல் ஆய்வாளர் போன் மூலம் கூறினார். அதற்கு அவர் தற்சமயம் சென்னையில் இருப்பதாகவும், உடனடியாக நாச்சியார்கோவில் வர இயலாது என்றும், 6 மணி நேரத்திற்குள் வந்துவிடுவேன் அதுவரையில் எந்தவித சடங்குகளும் செய்ய வேண்டாம் என்றும் கூறியுள்ளார். அதற்கு நாச்சியார்கோவில் காவல் ஆய்வாளர் உங்கள் சித்தி இறந்து ஒரு வாரத்திற்கும் மேல் ஆகிறது போல் இருக்கிறது என்றும் அவர் வீட்டிற்குள்ளேயே இறந்து கிடக்கிறார் என்றும் துர்நாற்றம் வீசியதால் நாங்கள் தான் பூட்டை உடைத்து உள்ளே சென்றோம் என்றும் அதனால் மேலும் 6 மணி நேரம் வைத்திருக்க முடியாது என்றும், சங்கர் கணேஷ் உங்கள் சித்தியின் உடலை தன்னிடம் ஒப்படைக்கும்படி கூறியதால், அவரிடம் உங்களது சித்தியின் உடலை ஒப்படைத்து விடுகிறோம் என்றும் அவர் அடக்கம் செய்து விடுவார் என்று கூறியுள்ளார். எங்களுக்கென்று சில சாஸ்திர சம்பிரதாயங்கள் இருக்கிறது என்றும், அதன்படிதான் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்றும், அதுவரையில் குளிர்பதன பெட்டியில் வைத்திருங்கள் என்றும் கூறினார்.

**2(4)** மேலும் 2ம் மனுதாரரது அத்தை மகன் நடராஜன் ஊரிலிருந்து அன்று இரவே வந்த பிறகு, அவசர அவசரமாக வீட்டிற்கு சென்று விசாரித்தபொழுது, தெருவில் இருந்தவர்கள் மற்றும் 2ம் மனுதாரரது அத்தையின் வீட்டில் வேலை செய்தவர்கள் உங்களது சித்தியின் உடலை வக்கில் சங்கர் கணேஷ் அவரிடம் ஒப்படைக்கும்படி கூறியதால், நாச்சியார்கோவில், காவல் ஆய்வாளர் உடலை அவரிடம் ஒப்படைத்து விட்டதாகவும், வக்கில் சங்கர் கணேஷ் மனைவி பத்மாவதி, அந்த தெருவில் வசித்து வந்த சுழட்டி (எ) சுப்ரமணியன் மெடிக்கல் ராஜ (எ) நடராஜன், நஜிர் அகம்மது, பாலகிருஷ்ணன் மற்றும் சீனிவாசன் ஆகியோர்கள் இரவோடு இரவாக துாக்கி சென்று எரித்துவிட்டார்கள் என்று கூறியுள்ளனர். மேற்படி விவரத்தை கேள்விப்பட்ட நடராஜனும், 2ம் மனுதாரரும் ஊரில் இருந்த நபர்களையும், தங்களது உறவினர்களையும் காலையில் அழைத்து சென்று, 3 வது எதிரியான நாச்சியார்கோவில் காவல் ஆய்வாளரிடம் 1, 2 எதிரிகள் மீதும், அவர்களை சார்ந்தவர்கள் மீதும் தனது சித்தியின் மரணத்தில் மர்மம் இருப்பதாக்கூறி புகார் கொடுத்தார். அப்போதைய நாச்சியார்கோவில் காவல் ஆய்வாளரான 3ம் எதிரியும், அவருடன் சம்பவ இடத்திற்கு வந்திருந்த காவல் சிறப்பு உதவி

Digitally signed by J.Parimala
J.Parimala

ஆய்வாளர் ராஜேந்திரன் என்பவரும் 2ம் மனுதாரரிடம் புகார்மனுவை பெற்றுக்கொண்டு, நாங்கள் விசாரிப்பதாகவும், இரண்டொரு நாட்கள் பொறுத்துக்கொள்ளும்படியும், எதுவாக இருந்தாலும் பார்த்துக்கொள்ளலாம் என்றும் கூறினார். நாச்சியார்கோவில் காவல் ஆய்வாளரான வார்த்தையை நம்பி 2ம் மனுதாரரும் ஏனையர்களும், திரும்ப வந்துவிட்டார். 2ம் மனுதாரர் 2 தினங்கள் கழித்து காவல் ஆய்வாளரை சந்திக்கும் தருணங்களில் எல்லாம் விசாரித்துக்கொண்டிருக்கிறேன் எனக்கூறி பல மாதங்கள் காலம் கடத்தி வந்தனர். மேலும் பல நாட்களாக 2ம் மனுதாரரும் அவரது உறவினர்களும், நாச்சியார்கோவில் காவல் ஆய்வாளர் அவர்களை சந்தித்து வாதியையும், அவரது மனைவியையும், அழைத்து விசாரணை செய்யும்படியும், அவர்மீது நடவடிக்கை எடுத்து கைது செய்யும்படியும், கூறிவந்தார். ஆனால் நாச்சியார்கோவில் காவல் ஆய்வாளர் அவர்கள், மேற்படி இராசாத்தி அம்மாளின் மர்ம மரணம் குறித்து எந்தவித விசாரணை செய்யாமல் இருந்து வந்தார்.

**2(5)** 2ம் மனுதாரரது அத்தையின் வீட்டிற்கு கடந்த சில மாதங்களாக சென்று வராமல் இருந்ததை வாதியும், அவரது மனைவியும் பயன்படுத்திக்கொண்டு, ராசாத்தி அம்மாளின் வீட்டை 21.06.2024 தேதியன்று JCB இயந்திரம் மூலம் இடித்துக் கொண்டிருப்பதாக ஊரில் இருந்தவர்கள் 2ம் மனுதாரருக்கு தகவல் கூறியதன் பேரில் மனுதாரரும் நடராஜனும் 2ம் மனுதாரரது அத்தை வீட்டிற்கு சென்றார். அப்போது வாதியும், அவரது மனைவியும் பல அடியாட்களை வைத்துக்கொண்டு, மனுதாரரது அத்தையின் வீட்டை JCB இயந்திரம் மூலம் இடித்துக் கொண்டிருந்தார்கள். நடராஜன் ஊரில் இருந்த முக்கிய நபர்களை அழைத்து சென்று ஏன் என் சித்தியின் வீட்டை இடிக்கிறீர்கள் என்று கேட்ட பொழுது வாதியும், அவரது மனைவியும் எங்களை பார்த்து இந்த வீடு எங்களுக்கு சொந்தமாகிவிட்டது என்றும், நீ இந்த வீட்டு பக்கம் வந்தால், உன் சித்தி இறந்தது போல நீயும் சாக வேண்டியதுதான் என்று மிரட்டி 2ம் மனுதாரரையும் மனுதாரருடன் வந்த நபர்களையும் துரத்திவிட்டனர். 2ம் மனுதாரர் உடனடியாக ஊர் பொதுமக்களை அழைத்து சென்று நாச்சியார்கோவில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். புகாரை விசாரித்த அப்போதைய காவல் ஆய்வாளர் அவர்கள் மேற்கண்ட வாதியையும், அவரது மனைவியையும் விசாரணைக்கு அழைத்த பொழுது வாதி தற்போதைய காவல் ஆய்வாளர் அவர்களிடமும், மனுதாரருடன் வந்த உறவினர்களிடமும், சித்தி இராசாத்தி அம்மாள் குடியிருந்து வந்த வீட்டின் ஆவணங்களின் ஜெராக்ஸ் நகல்கள் எனக்கூறி, சிலவற்றை கொடுத்துவிட்டு, இந்த சொத்து எனக்கு உரிமையுடையது என்றும் இனி தேவையில்லாமல் என்மீது புகார் கொடுக்க கூடாது என்றும் தேவையில்லாமல் எங்களை காவல் நிலையத்திற்கு அழைக்கவேண்டாம் என்றும் அப்படி தேவையில்லாமல் 2ம் மனுதாரரை அழைத்தால், உங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும் என்றும் நாங்கள் இருவரும் வக்கில்கள் என்றும், உங்களால் எதுவும் எங்களை செய்ய முடியாது என்றும், தற்போதைய காவல் ஆய்வாளர் மற்றும் என்னுடன் இருந்த நபர்களிடம் கூறிவிட்டு சென்றுவிட்டார்கள்.

**2(6)** வாதி கொடுத்த ஆவணங்கள் பற்றி விசாரணை செய்த தற்போதைய காவல் ஆய்வாளர் அவர்கள் 3 நாட்கள் கழித்து, 2ம் மனுதாரரை அழைத்து அவரிடம் இவ்வழக்கின் வாதி சங்கர்கணேஷ் எந்தவித அடிப்படை மூகாந்தரமும் இல்லாமல் மோசடியான முறையில் உங்கள் சொத்தின் ஆவணங்களை மோசடியாக தயார் செய்து வைத்துள்ளார் என்றும், அந்த மோசடி ஆவணத்தின் மூலம், உங்களது அத்தையின் சொத்துக்களை அபகரிக்க முயற்சி

J.Parimala Digitally signed by J.Parimala

செய்கின்றனர் என்றும், நீங்கள் உடனடியாக தஞ்சாவூர் சென்று மாவட்ட ஆட்சியர் அவர்களிடமும், காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்துவிடுங்கள் என்றும் கூறி, 2ம் மனுதாரர் விசாரணை செய்தால் பல நபர்களையும், வக்கீல்களையும் அழைத்து வந்து பிரச்சனை செய்கிறார் என கூறி மிரட்டுகிறார் என்றும், மனுதாரரையும் மனுதாரருடன் வந்த நபர்களையும் ஊர்மக்களையும் அனுப்பி வைத்தார். மேலும் காவல் நிலையத்தில், 2ம் மனுதாரரது உறவினர்களிடம் வாதியால் கொடுக்கப்பட்ட ஆவணங்கள் உண்மையானதா? என்பது குறித்து 2ம் மனுதாரரது அத்தை மகன் நடராஜன் கும்பகோணம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று விசாரித்த பொழுது, வாதியால் கொடுக்கப்பட்ட மேற்படி அடங்கல், சிட்டா மற்றும் பட்டா பெயர் மாற்றம் உத்தரவு போன்ற ஆவணங்கள் மோசடியாக தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றும், மேற்கண்ட ஆவணங்கள் மோசடியாக தயார் செய்யப்பட்ட தேதிகளில் அந்த ஆவணங்களில் கையெழுத்து செய்த அதிகாரிகளான துணை வட்டாட்சியரான ந.வெங்கடஜலம் அவர்களும், கோவனூர் கிராம நிர்வாக அலுவலரான அறிவழகன் அவர்களும் ஆவணங்களில் குறிப்பிட்ட தேதிகளில் அந்த அலுவலகங்களில் பணியில் இருக்கவில்லை என்றும், வேறு அலுவலகங்களில் பணியில் இருந்து வந்துள்ளார்கள் என்றும், இதுபோன்ற பல மோசடியான ஆவணங்களை தயார் செய்து வருகிறார்கள் என்றும், அதனால் உடனடியாக மாவட்ட ஆட்சியரிடம் சென்று மேற்படி நபர்கள் மீது புகார்மனு கொடுங்கள் என்று கூறிவிட்டார்கள்.

**2(7)** மேலும் கும்பகோணம் வட்டாட்சியர் அலுவலகத்தாரால் வாதியிடம் உள்ள பட்டா உத்தரவு போலியானவை என்ற விவரத்தை தெரிந்த 2ம் மனுதாரர் அதிர்ச்சியடைந்து, ஊர்பொதுமக்களை அழைத்து கொண்டு, 2ம் மனுதாரரது அத்தையின் வீட்டிற்கு சென்று, அங்கு வேலைக்காக பணியில் அமர்த்தியிருந்த ராஜேஸ்வரி, முருகன், மற்றும் தெருவாசிகளான ஞானபிரகாசம், மனோகர், பிரகாஷ், கண்ணாமணி, இன்னும் பல நபர்களை விசாரித்த பொழுது மனுதாரரது அத்தையின் ராசாத்தியின் இறப்பிற்கு பிறகு, வீட்டில் 6 பீரோவில் வைத்திருந்த நகைகள், வெள்ளி பொருட்கள், ரொக்க தொகைகள், சொத்தின் ஆவணங்கள் அனைத்தையும், வாதியும், அவரது மனைவியும் எடுத்து சென்றுவிட்டனர் என்றும், அவர்கள் வசம் தான் தற்பொழுது அனைத்து பொருட்களும் பணமும் உள்ளன என்றும் கூறுகின்றனர். இந்த சம்பவம் குறித்து நடராஜன் வாதியிடம் சென்று மீண்டும் கேட்டதற்கு வாதி மனுதாரிடம் ஒழுங்குமரியாதையாக என்பேச்சை கேட்டுக்கொண்டு, இரு தேவையில்லாமல், ஊர்மக்களை அழைத்து வந்து என்னிடம் பிரச்சனை செய்து, என்னை கொலைகாரனாக்கிவிடாதே என்று மிரட்டியுள்ளார் என்று மனுதாரரிடம் தெரிவித்தார். மேற்படி சம்பவம் பற்றி காவல் நிலையத்திற்கு அவர்கள் புகார் அளிக்க சென்ற பொழுது வாதி வழக்கறிஞர்கள் என்பதால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க காவல் அதிகாரிகள் காலம் தாழ்த்தி வந்து, மேல் அதிகாரிகளிடம் புகார் கொடுங்கள் என்று கூறி வருகின்றனர். மேலும் வாதிகளின் மோசடியான செயல்கள் பற்றி 2ம் மனுதாரர் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள், தஞ்சாவூர் காவல் கண்காணிப்பாளர் அவர்கள், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், கோட்டாட்சியர் அவர்கள், வட்டாட்சியர் அவர்கள், காவல் ஆய்வாளர் மற்றும் வழக்கறிஞர் சங்க தலைவர், செயலாளர் ஆகியோர்களுக்கு நடராஜன் புகார் மனு அனுப்பி வைத்துள்ளார். மேலும் நடராஜன் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடமும் நேரடியாக சென்று புகார் மனுவும்

J.Parimala Digitally signed by J.Parimala

கொடுத்துள்ளார். மேற்படி புகார் மனுக்கள் விசாரணை நிலுவையில் இருந்து வருகிறது.

**2(8)** மேலும் இவ்வழக்கில் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மோசடியாக தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிவு செய்யப்படாத உயிலின் அடிப்படையில் ஏற்பட்ட ஆவணங்களை ரத்து செய்து, வாதி மீதும், அவரது மனைவி மீதும் மோசடி ஆவணம் குறித்து நடவடிக்கை எடுக்க உத்தரவிடவேண்டி, அரசு அலுவலகர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுக்களையும், சமத்தனார்குடி ஊர் மக்களால் வாதியின் தவறான செயல்பாடுகளை குறித்தும், அவர்களை கைது செய்து குற்ற நடவடிக்கை எடுக்க கோரியும், ஊரில் லித்தோ போஸ்டர் ஒட்டியுள்ளனர். இந்நிலையில் கடந்த 28.07.2024 தேதியன்று நடராஜன் சமத்தனார்குடி ஊர் மக்களின் துணையுடன் தாவா சொத்தை அவர்களது அனுபவத்திற்கு கொண்டு வந்து, அமைதியான முறையில் பராமரித்து வருகிறார். அதற்கான ஆவணங்களையும் நடராஜன் தரப்பினராக சேர்க்க கோரிய இடைமனுவில் தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில் மேற்படி வாதிக்கும், தங்களுக்கும் இடையே பிரச்சனை இருந்து வரும் நிலையில் தங்களுக்கும், சமத்தனார்குடி மக்களுக்கும் தெரியாமல், இவ்வழக்கிற்கும், இந்த சொத்திற்கும் தொடர்பில்லாத அரசு அதிகாரிகளை பார்ட்டியாக சேர்த்து நடராஜனை தாவா சொத்திலிருந்து வெளியேற்றும் நோக்கத்தோடு வாதியால் இவ்வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் மோசடியாக தயாரிக்கப்பட்டவை மற்றும் மனுதாரரது அத்தையின் வீட்டிலிருந்து அபகரிக்கப்பட்டவை என்ற விவரம் நீதிமன்றத்திற்கு தெரிந்துவிடக்கூடாது என்று எண்ணத்தின் அடிப்படையில் தங்களை ஒரு தரப்பினராக சேர்க்காமல் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்களை இவ்வழக்கில் பார்ட்டியாக சேர்த்தால், இவ்வழக்கின் உண்மை தன்மை தெரியவரும். தங்களுக்கு மேற்படி வழக்கில் நல்ல கட்சிகள் உள்ளது. தாவா சொத்தை நடராஜன் தற்பொழுது அனுபவித்து வருவதாலும், தாவா சொத்தை பொருத்து வாதிக்கு எந்தவித தொடர்பும் இல்லை என்பதாலும், மனுதாரரையும் இவ்வழக்கில் பார்ட்டியாக சேர்த்து வழக்கை தொடர்ந்து நடத்த வேண்டியது நியாயமாகவும், அவசியமாகவும் இருக்கிறது.

**2(9)** மனுதாரர்களை இவ்வழக்கில் பார்ட்டியாக சேர்ப்பது, இயற்கை நீதிக்கு உகந்ததாக இருக்கும். இம்மனுவை அனுமதிப்பதால், வாதிக்கும், பிரதிவாதிகளுக்கும் எந்தவித கஷ்டங்களும், நஷ்டங்களும் ஏற்படப்போவதில்லை. ஆனால் இம்மனுவை அனுமதிக்காவிட்டால், மனுதாரர் /3ம் நபர்களுக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும். மேலும் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த அசல் வழக்கு அன்னியில் தாவா சொத்தை அபகரித்துக்கொள்ளும்பொருட்டு, மோசடியான முறையில் வாதிக்கு நெருக்கமான நபர் மீது ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு 140/2024 இந்த வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேற்படி வழக்கானது நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி வழக்கில் மனுதாரரையும் ஒரு பார்ட்டியாக சேர்க்க கோரி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுவானது விசாரணைக்காக நிலுவையில் இருந்து வருகிறது. மேலும் வாதி அரசு அதிகாரிகளை தேவையில்லாமல் இந்த வழக்கில் சேர்த்து ஒவ்வொரு துறையில் உள்ள அதிகாரிகளுக்கும் தனித்தனி பரிகாரத்தை கேட்டு, அவர்களின் அரசு பணியை அச்சுறுத்தும் விதமாக நிதிமன்றத்திற்கு தேவையில்லாமல்

J.Parimala Digitally signed by J.Parimala

அழைத்து அலைகழிக்கும் விதமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வழக்கு நிலுவையில் இருந்தால், தங்களுக்கு அரசு அதிகாரிகளால் சட்டபூர்வமான முறையில் கிடைக்கும் ரசீதுகளும், சான்றிதழ்களும், பாதுகாப்பும் கிடைக்கபெறுவதை, தடுக்கும் விதமாகவும், இந்த வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார். மேலும் இந்த வழக்கில் 2ம் மனுதாரர் தரப்பினராக சேர்த்து தங்களது குடும்பத்தாருக்கு உரிமையுடைய பூர்வீக சொத்தை காப்பாற்ற வேண்டிய சூழ்நிலையில் இருந்து வருகிறார். இவ்வழக்கில் தன்னை ஒரு தரப்பினராக சேர்க்காவிட்டால் தனக்கு மிகுந்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படுவதுடன் பாதுகாப்பில்லாத சூழ்நிலையும் சொத்து இழப்பும் ஏற்பட்டுவிடும்.

2(10) மேலும் இவ்வழக்கில் மக்களுடன் நேரடி தொடர்பில் இருக்கும் அரசு அதிகாரிகளை தரப்பினராக சேர்க்கப்பட்ட சங்கதியிலிருந்தே இந்த வாதி மோசடியான முறையில் தயார் செய்யப்பட்ட ஆவணங்களை கொண்டு, தாவா சொத்திற்குண்டான சட்டபூர்வ ஆவணங்களை தயார் செய்யும் நோக்கத்தோடு, மேற்படி அரசு அதிகாரிகளை அணுகி மனு செய்தும், வாதியின் கோரிக்கை மேற்படி அரசு அதிகாரிகளால் நிராகரிக்கப்பட்டதை பொறுத்துக்கொள்ள முடியாத வாதி இந்த வழக்கில் நேர்மையான அரசு அதிகாரிகள் அனைவரையும் தரப்பினராக சேர்த்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். நில சம்மந்தமான பிரச்சனைகளை தீர்த்து வரும் மேற்படி அதிகாரிகள் அனைவரும் ஒட்டுமொத்தமாக ஒரேமித்த கருத்துடன் வாதியின் கோரிக்கையை நிராகரித்திலிருந்தே வாதி ஓர் மோசடி பேர்வழி என்பதும், தாவா சொத்திற்கும் வாதிக்கும் தொடர்பில்லை என்பதும் தெள்ள தெளிவாக தெரியவரும். ஒருவேளை வாதி தாவா சொத்தின் உண்மையான நேர்மையான உரிமையாளராக இருந்திருந்தாலும், உண்மையான ஆவணங்களை தன்வசம் கொண்டிருந்தாலும், மேற்படி அரசு அதிகாரிகளை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்திருக்க மாட்டார். எனவே நீதிமன்றத்தார் அவர்கள் மனுதாரர்களை இந்த வழக்கின் வாதுரையிலும், இடைமனுவிலும், தரப்பினராக சேர்த்து உத்தரகோரி மனுதாரர்களால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 3. <u>1ம்எதிர்மனுதாரரின் எதிருரையின் சுருக்கம்</u>:

3(1) மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு சட்டநிலையில் ஏற்புடையதல்ல. இந்த வழக்கின் நடராஜன் என்பவர் தன்னையும் ஒரு தரப்பினராக சேர்த்து கொள்ள வேண்டும் என்று தாக்கல் செய்துள்ள IA No.453/2024 மனுவிற்கு இந்த எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை மற்றும் கூடுதல் எதிருரையில் சொல்லியுள்ள சங்கதிகளை இந்த மனுவிற்கு தாக்கல் செய்யப்படும் எதிருரையின் ஒரு பாகமாக ஏற்றுக்கொள்ளும்படி இந்த எதிர்மனுதாரர் தயவாய் வேண்டுகிறார். OS No.140/2024 in IA No.453/2024 , OS No.146/2024 in IA No.492/2024 வழக்கில் நடராஜன் என்பவர் தன்னையும் தரப்பினராக சேர்க்க வேண்டி மனு தாக்கல் செய்து அதில் இந்த எதிர்மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் மா.சா.ஆ 37 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இதர ஆவணங்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நடராஜன் தாக்கல் செய்துள்ள சிபிசி ஆர்டர் 1 ரூல் 10(2) இரண்டு மனுவிற்கும் இந்த எதிர்மனுதாரர் தரப்பில் விரிவான எதிருரை, கூடுதல் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வேண்டும் என்றே வீண் கால தாமதம் செய்ய வேண்டும் வழக்கினை இழுத்தடிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் நடராஜன் ஸ்ரீகாந்த் ஸ்ரீராம் ராஜலெட்சுமி ஆகியோர்கள் மாறிமாறி

J.Parimala Digitally signed by J.Parimala

தன்னையும் தரப்பினராக சேர்க்க மனு தாக்கல் செய்துள்ளார்கள். மேலும் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு மற்றும் அதனுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யாகும். மனுவிற்காக மனுதாரரால் கண்டுபிடிக்கப்பட்ட பொய்யான சங்கதிகளாகும். மனு சங்கதிகளை மனுதாரர் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள அபிடவிட்டில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் மனுதாரரின் கற்பனையான பொய்யான சங்கதிகளாகும். மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு சட்டநிலையிலும் பொருண்மைகளின் அடிப்படையிலும் அடிப்படை மூகாந்திரம் மற்றும் சட்டப்படி ஆவணங்கள் ஏதும் இன்றி தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும். மனுதாரர் தாக்கல் செய்துள்ள சிபிசி ஆர்டர் 1 ரூல் 10(2) மனுவிற்காக சட்டப்படியான ஆவணங்கள் ஏதும் மனுதாரர் தாக்கல் செய்யவில்லை. எதன் அடிப்படையில் மனுதாரர்கள் இந்த வழக்கில் தன்னையும் தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று மனுதாக்கல் செய்துள்ளார்கள் என்பதை ஆவணங்களின் வழியே சட்டப்படி நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்கள்.

**3(2)** மேலும் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளில் இந்த எதிர்மனுதாரரால் எதிருரையில் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள சங்கதிகள் தவிர ஏனையவற்றை உண்மைக்கு மாறானவை என இந்த எதிர்மனுதாரர் மறுக்கிறார். மனு சட்டப்படியும் பொருண்மை படியும் நிலைக்கதக்கதல்ல. தாவா சொத்து காலஞ்சென்ற ராசாத்தி அம்மாளுக்கு சொந்தமான சொத்தாகும். மனுதாரர் தாக்கல் செய்துள்ள அபிடவிட் பத்தி 2 ல் வழக்கு சொத்தின் முந்தைய உரிமையாளரான ராசாத்தி அம்மாள் கல்கத்தா மாநில தலைமை செயலகத்தில் மூத்த முதல்நிலை அதிகாரியாக பணிபுரிந்து வந்தார் என்று கூறியுள்ளது தவறாகும். உண்மையில் அவர் மேற்படி அலுவலகத்தில் மொழிபெயர்ப்பாளராக பணியாற்றி வந்தார். மேற்படி ராசாத்தி அம்மாளின் வயோதிகம் காரணமாக மனுதாரர் அவருடனேயே தங்கி வந்ததாகவும் அவரது பணியின் காரணமாக அவ்வபோது தான் சமையல் வேலை செய்வதால் வெளியூர் சென்று வருவதாகவும் அந்த நேரத்தில் ராசாத்தி அம்மாளின் அண்ணன் மகனான மனுதாரர் உடனிருந்து பராமரித்து வந்ததாகவும் சொல்லியுள்ளது உண்மைக்கு மாறானதாகும். மேலும் ராசாத்தி அம்மாள் அவரது வீட்டில் 100 பவுன் தங்க நகைகள் 40 கிலோ வெள்ளி பொருட்கள் ஐம்பொன் காலி சிலை இதர பொருட்களும் ஒரு கோடி ரூபாய்க்கும் மேல் கையிருப்பு தொகையாக பீரோவில் வைத்திருந்ததாக சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யாகும். அதனை மனுதாரர் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். மேற்படி பொருட்களை அபகரிக்கும் நோக்கத்தில் மனுதாரரும் மனுதாரரின் மனைவியும் அடிக்கடி ராசாத்தி அம்மாளின் வீட்டிற்கு சென்று இணக்கமான பழக்கத்தை ஏற்படுத்த முயற்சி செய்ததாகவும் ஆனால் ராசாத்த் அம்மாள் ஆச்சாரமான பிராமண பெண் என்பதால் வாதியையும் அவரது மனைவியையும் வீட்டிற்குள் பல தருணங்களில் அனுமதிக்கவில்லை என்பதும் பொய்யாகும். உண்மையில் ராசாத்தி அம்மாள் அவரது வயோதிக காலத்தில் வாதியை சார்ந்து இருந்தார். வாதி தான் அவருக்கு தேவையான அனைத்து பணிவிடைகளையும் செய்து நல்ல முறையில் பராமரித்து வந்தார். அதனால் ராசாத்தி அம்மாள் வாதியை அவரது சொந்த மகன் போல் பாவித்து எந்தவொரு பாகுபாடும் இல்லாமல் அன்புடனும் நேசத்துடனும் நன்றியோடும் நடந்து வந்தார். இந்த விபரம் அவரது சமூக

J.Parimala Digitally signed by J.Parimala

உறவினர்கள் ஊர் மக்களுக்கும் நன்கு தெரியும்.

**3(3)** மேலும் மனுதாரரும் மனுதாரரின் அத்தை மகன் நடராஜன் என்பவரும் பணி நிமித்தமாக வெளியூர் செல்லும் நேரத்தில் ராசாத்தி அம்மாளை கவனித்து கொள்ள ராஜேஸ்வரி மற்றும் முருகன் என்பவர்களை பணிக்கு அமர்த்தியதாக சொல்லியுள்ளது தவறாகும். உண்மையில் இந்த வாதி/எதிர்மனுதாரரின் ஆலோசனையில் பேரில் அவர்களை மேற்படி ராசாத்திஅம்மாள் தான் தனக்கு தேவையாக பணிவிடைகளை செய்வதற்காக பணியில் அமர்த்தினார். ராசாத்தி அம்மாள் காலமான பிறகு மேற்படி சொத்தில் உள்ள சிறிய பகுதியில் ராஜேஸ்வரி மாத வாடகைக்கு குடியிருந்தார். அதற்காக ராஜேஸ்வரி இந்த எதிர்மனுதாரருக்கு 2022 ம் ஆண்டில் வாடகை பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார். ராசாத்தி அம்மாவிடம் நடராஜன் அடிக்கடி பணம் கேட்டு பிரச்சனை செய்து வந்தார். ஒரு கால கட்டத்தில் ராசாத்தி அம்மாள் நடராஜனுக்கு பணம் கொடுக்காததால் ராசாத்தி அம்மாளை கட்டிபோட்டு பணத்தை நடராஜன் திருடிச்சென்றுவிட்டார். அதன் பின்னர் நடராஜனை வீட்டிற்குள் ராசாத்தி அம்மாள் அனுமதிக்கவில்லை. நடராஜன் மற்றும் மனுதாரரை இந்த எதிர்மனுதாரர் வீட்டைவிட்டு விரட்டினார் என்று செல்லியுள்ளது தவறானதாகும். மேலும் கடந்த 16.12.2021 தேதியில் ராசாத்தி அம்மாள் உடல்நிலை சரியில்லாமல் இயற்கையாக காலமாகிவிட்டார். மேற்படி விபரம் நன்கு தெரிந்தும் மனுதாரர்களோ நடராஜனோ இறுதி சடங்கு செய்ய முன்வரவில்லை. அதற்கு காரணம் ராசாத்தி அம்மாளுக்கும் மனுதாரருக்கும் இருந்த முன் வருத்தம் தான். அதன் பின்னர் இந்த எதிர்மனுதாரர் வாதி காவல்துறைக்கும் வருவாய் துறைக்கும் தகவல் கொடுத்துவிட்டு தனக்கு ராசாத்தி அம்மாள் எழுதிக்கொடுத்த உயில் வாசகப்படி ராசாத்தி அம்மாளுக்கு இறுதி சடங்கு செய்து முடித்துள்ளார். இதனை கிராமவாசிகள் அனைவரும் நன்கு அறிவார்கள். இந்த விபரம் மனுதாரர்களுக்கும் நடராஜனுக்கும் நன்கு தெரியும். மனுதாரர் இறுதி சடங்கில் கலந்து கொள்ளவில்லை. தற்போது வழக்கிற்காக பொய்யான சங்கதிகளை இட்டுக்கட்டி உண்மைக்கு மாறாக சொல்லியுள்ளார். மேலும் ராசாத்தி அம்மாள் மர்மமான முறையில் மரணமடைந்து இருந்தால் காவல்துறை சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொண்டு சந்தேக மரணம் என்று வழக்கு பதிவு செய்து பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தி அவரது சட்டபூர்வ வாரிசுகளிடம் மட்டுமே உடலை ஒப்படைத்திருப்பார்கள். அதனை எந்தவொரு சக்தி வாய்ந்த நபராலும் தடுக்க இயலாது. ஆனால் மனுதாரர் மேற்படி சங்கதிகளை முற்றிலும் மறைத்துவிட்டு முற்றிலும் உண்மைக்கு மாறான சங்கதிகளை சொல்லியுள்ளார். அவ்வாறான நடடிவக்கை ஏதும் மனுதாரர் இதுநாள் வரையில் எடுக்கவில்லை.

**3(4)** மேலும் உண்மையில் ராசாத்தி அம்மாள் காலமான பிறகு அவர் வாதி இந்த எதிர்மனுதாரருக்கு 19.09.2020 தேதியில் எழுதி வைத்த உயில் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டு வழக்கு சொத்தினையும் உயிலில் கண்டுள்ள இன்ன பிற சொத்தினையும் வாதி அடைந்துகொண்டு அனுபவம் செய்து வருகிறார். மேற்படி சங்கதிகள் மனுதாரருக்கு நன்கு தெரியும். மனுதாரர் அபிடவிட்டில் சொல்லியுள்ளது போல் எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை. மனுதாரரை வாதியோ அவரது மனைவியோ மிரட்டவில்லை. அவதூறான செய்தியை மனுதாரர் சொல்லியுள்ளார். மோசடி ஆவணம் ஏதும் இந்த எதிர்மனுதாரர் தயார் செய்யவில்லை. தாவா சொத்தின் சொத்து வரி பட்டா சிட்டா மின்னிணைப்பு இந்த எதிர்மனுதாரர் பெயரில் உள்ளது. மனுதாரர் பின் யோசனையுடன் மனுவிற்காக மனுதாரரால்

Digitally signed by J.Parimala
J.Parimala

கண்டுபிடிக்க சங்கதிகளை மனு அபிடவிட்டில் சொல்லியுள்ளார். உயில் படி சொத்துக்கள் இந்த எதிர்மனுதாரருக்கு கிடைக்கப்பெற்றது. அதனை மனுதாரர் ஆட்சேபித்ததால் உரிய சிவில் நீதிமன்றத்தில் தான் வழக்கு தாக்கல் செய்ய முடியும். லித்தோ போஸ்டர் சம்பந்தமாக இந்த எதிர்மனுதாரர் கும்பகோணம் நீதித்துறை நடுவர் நீதிமனற்ம் எண்2ல் அவதூறு வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கு சி.ஆர்.எம்.பி 2366/2025 என்ற எண்ணில் விசாரணை செய்யப்பட்டு அதில் நடராஜன் சரவணன் வெங்கடேசன் என்பவர்கள் குற்றம் செய்ததற்கான முகாந்திரம் இருப்பதாக தீர்ப்பு வழங்கப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. மேலும் கடந்த 28.07.2024 தேதியில் ஊர்மக்கள் உதவியுடன் தாவா சொத்தை மனுதாரரின் அனுபவத்திற்கு கொண்டு வந்துள்ளதாக சொல்லியுள்ளது முற்றிலும் தவறாகும். தாவா சொத்து இன்று வரையில் இந்த எதிர்மனுதாரரின் அனுபவத்திலும் சுவாதீனத்திலும் தான் இருந்து வருகிறது.

**3(5)** மேலும் இந்த அசல் வழக்கில் வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சனை தொடர்பாக குறித்து தாக்கல் செய்யப்பட்ட நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரிய வழக்காகும். இதில் இந்த மனுதாரருக்கு எந்தவிதமான தொடர்பான கிடையாது. வழக்கு சொத்தில் மனுதாரருக்கு உரிமை உள்ளது என்றால் அதற்கென உள்ள சட்ட வழிமுறைகளை பின்பற்றி மனுதாரர் தனியாக வழக்கு தாக்கல் செய்து தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமே தவிர இந்த வழக்கில் மனுதாரர் இடை நுழைந்து தனது பிரச்சனையினை சொல்லி நீதிமன்றத்தை குழப்புவது நீதிபரிபாலன முறைக்கு விரோதமானதாகும். மேலும் எதிர்மனுதாரர் பணிவுடன் தெரிவிப்பது என்னவென்றால் தடை உத்தரவு உறுத்துக்கட்டளை கோரும் வழக்கில் வாதியின் அனுபவத்திற்கு யாரால் இடைஞ்சல் ஏற்படுகிறதோ அவரைதான் வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டும் தாறாக மூன்றாம் நபரின் விருப்பத்திற்கு ஏற்றார் போல் அவரை தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை. இந்த மனுதாரர் வழக்கு சொத்திற்கும் வழக்கில் கோரப்பட்டுள்ள பரிகாரத்திற்கும் சிறிதும் சம்மந்தம் இல்லாத நபராவார். எனவே இந்த வழக்கில் மனுதாரர்கள் தேவையற்ற நபர்கள் ஆவார்கள். மனுதாரர்கள் இந்த வழக்கில் தன்னை ஒரு தரப்பினராக சேர்க்கக் கோரியுள்ள மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும்.

**3(6)** மேலும் மனுதாரர்கள் சட்டத்திற்கு புறம்பான இந்த எதிர்மனுதாரர் வசம் பணம் பறிக்கும் கெட்ட நோக்கத்தில் இட்டுகட்டப்பட்ட கற்பனை கதைகளை சொல்லி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள். வாதியின் நற்பெயருக்கு கலங்கம் ஏற்படுத்தும் எண்ணத்துடன் செய்யப்பட்ட அவதுாறாகும். மனுதாரர்கள் துாய கரங்களுடன் நீதிமன்றத்தை நாடவில்லை. இந்த மனு அனுமதிக்கப்பட்டால் இந்த எதிர்மனுதாரருக்கு பெருத்த கஷ்டம் நஷ்டம் ஏற்படும். மேலும் மாண்பமை மதுரை உயர்நீதிமன்ற கிளையில் WP(MD) 21929/2024 என்ற எண்ணில் மனுதாரர்கள் இறந்துவிட்ட ராசாத்தி அம்மாளின் வாரிசு என்று சான்று கொடுக்க உத்தரவிட கோரி தாக்கல செய்த ரிட் மனுவில் விசாரணை செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அந்த உத்தரவின் அடிப்படையில் கும்பகோணம் வட்டாட்சியர் உரிய விசாரணை செய்து அதன் பின்னர் மனுதாரர்கள் அனைவரும் காலஞ்சென்ற ராசாத்தி அம்மாளின் வாரிசு கிடையாது என்பதை தெரிவித்து ஒ.மு.4460/2020/அ1 09.11.2024 தேதியில் நீதிமன்ற பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தி மேலெழுத்து கடிதம் அளித்துள்ளார்.

J.Parimala Digitally signed by J.Parimala

அந்த கடிதம் சமூகம் நீதிமன்றத்தில் இந்த எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணமாக Ex.B17 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்த மனுதாரர்கள் மற்றும் நடராஜன் என்பவர்கள் மாண்பமை மதுரை உயர்நீதிமன்ற கிளையில் தாக்கல் செய்துள்ள வாரிசு சான்று கோரிய ரிட் மனுவில் தாக்கல் செய்துள்ள அபிடவிட்டில் நடராஜன் மற்றும் இந்த மனுவில் 3ம் மனுதாரர் ராஜலெட்சுமி ஆகியோரின் தாயார் பெயர் சாந்தம் என்று சொல்லியுள்ளார்கள். சாந்தம் ராசாத்தி அம்மாளின் உடன் பிறந்த சகோதரி என்று சொல்லி உத்தரவு பெற்றுள்ளார்கள். ஆனால் தற்போது நடராஜன் மற்றும் ராஜலெட்சுமி ஆகியோரின் தாயார் பெயர் முத்துலெட்சுமி என்று சொல்லியுள்ளார்கள்.

3(7) மேலும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரும் வழக்கில் வாதியின் நலனுக்கு எதிராக யார் செயல்படுகின்றார்களோ அவர்களுக்கு எதிராக தான் வாதி வழக்கு தாக்கல் செய்ய முடியும். வாதி தாக்கல் செய்யும் வழக்கில் யார் பிரதிவாதி என்பதை வாதி தான் முடிவு செய்ய இயலும். வாதியின் நலனுக்கு எதிராக மூன்றாம் நபர் மனு தாக்கல் செய்ய இயலாது என்பதை பணிவாய் தெரிவிக்கப்படுகிறது. மேற்படி வழக்கானது பிரதிவாதிக்கு எதிராக வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகார வழக்காகும். மேற்படி அசல் வழக்கில் 3ம் நபர் தன்னையும் ஒரு பார்ட்டியாக சேர்க்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளது சட்டநிலையில் ஏற்புடையதல்ல. மேலும் காலஞ்சென்ற ராஜாத்தி அம்மாள் 19.09.2020 தேதியில் எழுதி வைத்துள்ள உயில் பத்திரப்படி ராஜாத்தி அம்மாளுக்கு அனைத்து இறுதி சடங்கினையும் இந்த 1ம் எதிர்மனுதாரர் செய்துள்ளார். இதனை மனுதாரரும் கிராம மக்களும் நன்கு அறிவார்கள். உயில் பத்திரப்படி ராஜாத்தி அம்மாளுக்கு சொந்தமான சொத்துக்களை உயிலை நடைமுறைக்கு கொண்டு வந்து சட்டப்படி 1ம் எதிர்மனுதாரர் நடைமுறைபடுத்தியுள்ளார். சொத்தின் அனுபவம் மற்றும் சுவாதீனம் இந்த 1ம் எதிர்மனுதாரர் வசம் தற்போதும் இருந்து வருகிறது. நாளது தேதிவரையில் மின் கட்டணம் இந்த 1ம் எதிர்மனுதாரர் செலுத்தி வருகிறார். தாவா சொத்தினை மனுதாரர் 3ம் நபர் சொத்து சுவாதீனம் கடந்த 28.07.2024 தேதியில் எடுத்துள்ளதாக சொல்லியுள்ளது வியப்பாக உள்ளது. அதற்கான மூகாந்திரம் இல்லை. ராஜாத்தி அம்மாள் இறந்த பிறகு உயில் வாசகப்படி சொத்தின் பட்டா மற்றும் மின்னிணைப்பு மற்றும் வீட்டு வரி குடிநீர் வரி அனைத்தும் இந்த 1ம் எதிமனுதாரர்/வாதி பெயரில் மாற்றம் செய்யப்பட்டு தாவா சொத்தில் 1ம் எதிர்மனுதாரர் வசித்தும் அனுபவம் செய்து வருகிறார் என்பதை இந்த எதிர்மனுதாரர் தயவாய் தெரிவிக்கின்றார். யாரிடமிருந்து சொத்து சுவாதீனம் எடுத்துக்கொண்டார் என்று மனுவில் மனுதாரர் தெரிவிக்கவில்லை இதிலிருந்து மனுதாரரின் கூற்று பொய் என்பது தெளிவாகிறது.

3(8) மேலும் மனுதாரர் மனுவுடன் தாக்கல் செய்துள்ள அபிடவிட்டில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் அடிப்படை ஆதாரமற்ற பொய்யான குற்றச்சாட்டுகள் ஆகும். மனுதாரரின் அபிடவிட்டில் காலஞ்சென்ற ராசாத்தி அம்மாள் இந்த மனுதாரருக்கு என்ன உறவு முறை என்பதற்கு அதற்காக ஆதாரம் ஏதும் மனுதாரர் தாக்கல் செய்யவில்லை. உரிய வாரிசு சான்று ஏதும் மனுதாரர் தாக்கல் செய்யவில்லை. மனுதாரருக்கும் தாவா சொத்திற்கும் என்ன தொடர்பு என்பதை மனுதாரர் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். மேலும் முதலாவதாக – சாந்தம் காலஞ்சென்ற ராஜாத்தியின் உடன் பிறந்த சகோதரி என்பதை மனுதாரர் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். அதற்கான ஆவணம் ஏதும் மனுதாரர் தாக்கல் செய்யவில்லை.

J.Parimala Digitally signed by J.Parimala

இரண்டாவாதாக – மனுதாரர்கள் / 3ம் நபர் சட்டப்படியான வாரிசு என்பதை நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். அதற்கான ஆவணம் ஏதும் மனுதாரர் தாக்கல் செய்யவில்லை. மூன்றாவதாக – காலஞ்சென்ற ராஜாத்தி அம்மாள் 19.09.2020 தேதியில் எழுதிவைத்துள்ள உயில் பத்திரம் இந்த எதிர்மனுதாரரால் நடைமுறைப்படுத்தப்பட்டு உயில் நடப்பில் இருந்து வருகிறது. உயில் ஆவணத்தை பொருத்து மனுதாரர் /3ம் நபர் பரிகாரம் ஏதும் கோரி நடவடிக்கை எடுக்க கடமைப்பட்டுள்ளார். உயில் பத்திரப்படி ராஜாத்திக்கு சொந்தமான இதர சொத்துக்களும் இந்த எதிர்மனுதாரரால் அனுபவிக்கப்பட்டு வருகிறது. நான்காவதாக – காலஞ்சென்ற ராஜாத்தி அம்மாள் 19.09.2020 தேதியில் எழுதிவைத்துள்ள உயில் பத்திரப்படி எதிர்மனுதாரர் பெயரில் தாவா சொத்தின் சொத்து வரி மாற்றம் குடிநீர் வரி மாற்றம் மின்னிணைப்பு பெயர் மாற்றம் பட்டா பெயர் மாற்றம் அனைத்தும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது அதனை பொருத்து மனுதாரர் /3ம் நபர் நடவடிக்கை எதும் எடுக்கவில்லை. ஐந்தாவாதாக – எதிர்மனுதாரருக்கு எதிராக விளம்புகை பரிகாரம் மற்றும் சொத்து சுவாதீன பரிகாரம் கோரி மனுதாரர் /3ம் நபர் சட்ட நடவடிக்கை ஏதும் இதுநாள் வரையில் எடுக்கவில்லை. மேற்கண்ட எந்தவிதமான சட்ட நடவடிக்கைகளும் மனுதாரர்/3ம் நபர் எடுக்கவில்லை. ஆனால் கடந்த 28.07.2024 தேதியில் சொத்து சுவாதீனம் எடுத்துவிட்டதாக பொய்யாக சொல்லி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார். அதனால் மனுதாரரின் மனு சட்ட நிலையில் ஏற்புடையதல்ல. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும்.

**3(9)** மேலும் 2025 ம் ஆண்டு வரையில் தாவா சொத்திற்கு எதிர்மனுதாரர் பெயரில் சொத்து வரி செலுத்தப்பட்டு அதற்கான கணினி ரசீது வழங்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் இறந்துவிட்ட ராஜாத்தி அம்மாள் பெயரில் சொத்து வரி பெயர் மாற்றம் செய்யப்பட்டதாகவும் அதற்காக மனு அளித்துள்ளதாகவும் மனுதாரர் சொல்லியுள்ளது முற்றிலும் தவறாகும். 29.06.2024 தேதியில் தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு இந்த எதிர்மனுதாரர் பெயரில் வீட்டு வரி கொடுக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் அதே சொத்திற்கு இரண்டாவதாக சொத்து வரி இறந்தவர் பெயரில் கொடுக்கப்பட்டுள்ளதாக மனுதாரர் சொல்லியுள்ளது சட்டநிலையில் ஏற்புடையதல்ல. சொத்து வரி பெயர் மாற்றம் செய்ய மனு அளிக்க சட்டநிலையில் மூகாந்திரம் இல்லை என்பதை தயாவாய் தெரிவிக்கின்றார். மேலும் தாவா புல எண் கொண்ட சொத்து தொடர்பாக இந்த 1ம் எதிர்மனுதாரர் பெயரில் வழங்கப்பட்டுள்ள பட்டா சிட்டா சொத்து வரி குடிநீர் வரி மின்னிணைப்பு பெயர் ஆகியவற்றை எந்தவிதமான பெயர் மாற்றமும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி சமூகம் நீதிமன்றத்தில் (அசல் வழக்கு எண் 146/2024) 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணை நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில் சொத்து வரி பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று மனுதாரர் சொல்லியுள்ளது முற்றிலும் தவறாகும். மனுதாரர் வழக்கிற்காக ஆவணங்களை தயார் செய்துள்ளார் என்பது தெளிவாகிறது. இந்த 1ம் எதிர்மனுதாரரின் பெயரில் வழங்கப்பட்டு வந்த சொத்து வரி பட்டாவினை எந்தவிதமான விசாரணையும் இல்லாமல் எந்தவிதமான முறையான ஆவணங்களும் இல்லாமல் பெயர் மாற்றம் செய்துள்ளதாக மனுதாரர் சொல்லியுள்ளது முற்றிலும் பொய்யாகும். வழக்கிற்காக அனைத்து ஆவணங்களையும் தயார் செய்து மனுதாரர் தாக்கல் செய்துள்ளார்.

J.Parimala Digitally signed by J.Parimala

**3(10)** மேலும் கடந்த 11.07.1986 தேதியில் கும்பகோணம் வட்டாட்சியர் வழங்கிய வாரிசு சான்றினை சமூகம் நீதிமன்றத்தார் பரிசீலனை செய்ய வேண்டியது அவசியமாகிறது. வட்டாட்சியரின் வாரிசு சான்று படி பங்கஜத்தம்மாள் – ஜெகதீசன் தம்பதியருக்கு கீழ்கண்ட வாரிசுகள் 1, விஸ்வநாதன், 2. முத்துலெட்சுமி, 3. ரகுநாதன், 4. சிவகாமிசுந்தரி, 5. சத்தியமாபா, 6. கிருஷ்ணமூர்த்தி, 7. ராஜாத்தி, 8. வேணுகோபால் என்று வட்டாட்சியரின் வாரிசு சான்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. சாந்தம் என்ற பெயர் இடம்பெறவில்லை. மனுதாரர்/3ம் நபர் பொய்யாக கட்சியாடுகிறார். எந்தவிதமான அடிப்படை ஆதாரமும் இல்லாமல் பொய்யான காரணங்களுடன் மனுதாரர்கள் தன்னை இந்த வழக்கில் பார்ட்டியாக சேர்க்க வேண்டுமென்று இந்த Order 1 Rule 10(2) CPC மனுவினை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவினை அனுமதித்தால் இந்த 1ம் எதிர்மனுதாரருக்கு பெருத்த கஷ்டம் நஷ்டம் ஏற்படும். வாதியின் வழக்கு முற்றிலும் பாதிக்கப்படும். தாவா சொத்து இந்த மனுதாரர்/3ம் நபரின் அனுபவத்திலும் சுவாதீனத்திலும் இருப்பதாக மனுவில் சொல்லியுள்ளார். ஆனால் கடந்த 28.11.2024 மற்றும் 14.12.2024 தேதியில் GBS Web Camera மூலமாக எடுக்கப்பட்ட போட்டோவினை சமூகம் நீதிமன்றத்தில் இந்த 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். அதனை சமூகம் கோர்ட்டாரவர்கள் பரிசீலனை செய்யும் படி தயவாய் வேண்டுகிறார். மேற்படி போட்டோக்களை பரிசீலனை செய்தால் தாவா சொத்து இந்த 1ம் எதிர்மனுதாரர் வாதி வசம் உள்ளது என்பது தெளிவாக அறிய முடியும் என்பதை தெரிவிக்கின்றார். கடந்த 16.10.2024 தேதியில் தாவா சொத்தில் உள்ள மின்னிணைப்புக்கு டெபாசிட் தொகை இந்த 1ம் எதிர்மனுதாரர் செலுத்தியுள்ளார். எனவே எந்தவிதமான அடிப்படை ஆதாரமும் இல்லாமல் மனுதாரர்கள் /3ம் நபர் தாக்கல் செய்துள்ள இந்த Order 1 Rule 10(2) CPC மனுவினை வாதி /1ம் எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர் கோருகிறார்.

4. <u>1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்யும் கூடுதல் எதிருரை</u>:

**4(1)** மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவிற்கு இந்த 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில் விடுபட்டுள்ள சங்கதிகளை பொறுத்து இந்த கூடுதல் எதிருரை தாக்கல் செய்யப்படுகிறது. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யும் கூடுதல் எதிருரையினை முன்னதாக தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் ஒரு பாகமாக ஏற்றுக்கொள்ளும் படி வேண்டப்படுகிறது. மேலும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரும் வழக்கில் வாதியின் நலனுக்கு எதிராக யார் செயல்படுகின்றார்களோ அவர்களுக்கு எதிராக தான் வாதி வழக்கு தாக்கல் செய்ய முடியும். வாதி தாக்கல் செய்யும் வழக்கில் யார் பிரதிவாதி என்பதை வாதி தான் முடிவு செய்ய இயலும். வாதியின் நலனுக்கு எதிராக மூன்றாம் நபர் மனு தாக்கல் செய்ய இயலாது என்பதை தெரிவித்துக்கொள்கிறார். மேலும் காலஞ்சென்ற ராஜாத்தி அம்மாள் 19.09.2020 தேதியில் எழுதி வைத்துள்ள உயில் பத்திரப்படி ராஜாத்தி அம்மாளுக்கு அனைத்து இறுதி சடங்கினையும் இந்த 1ம் எதிர்மனுதாரர் செய்துள்ளார். இதனை மனுதாரரும் கிராம மக்களும் நன்கு அறிவார்கள். உயில் பத்திரப்படி ராஜாத்தி அம்மாளுக்கு சொந்தமான சொத்துக்களை உயிலை நடைமுறைக்கு கொண்டு வந்து சட்டப்படி 1ம் எதிர்மனுதாரர் நடைமுறைபடுத்தியுள்ளார். சொத்தின் அனுபவம் மற்றும் சுவாதீனம் இந்த 1ம் எதிர்மனுதாரர்

J.Parimala Digitally signed by J.Parimala

வசம் தற்போதும் இருந்து வருகிறது. நாளது தேதி வரையில் மின் கட்டணம் இந்த 1ம் எதிர்மனுதாரர் செலுத்தி வருகிறார். தாவா சொத்தினை மனுதாரர்/3ம் நபர் சொத்து சுவாதீனம் கடந்த 28.07.2024 தேதியில் எடுத்துள்ளதாக சொல்லியுள்ளது வியப்பாக உள்ளது. அதற்கான மூகாந்திரம் இல்லை. ராஜாத்தி அம்மாள் இறந்தபிறகு உயில் வாசகப்படி சொத்தின் பட்டா மற்றும் மின்னிணைப்பு மற்றும் வீட்டு வரி குடிநீர் வரி அனைத்தும் இந்த 1ம் எதிர்மனுதாரர்/ வாதி பெயரில் மாற்றம் செய்யப்பட்டு தாவா சொத்தில் 1ம் எதிர்மனுதாரர் வசித்தும் அனுபவம் செய்து வருகிறார் என்பதை இந்த எதிர்மனுதாரர் தெரிவிக்கின்றார். யாரிடமிருந்து சொத்து சுவாதீனம் எடுத்துக்கொண்டார் என்று மனுவில் மனுதாரர் தெரிவிக்கவில்லை. இதிலிருந்து மனதாரரின் கூற்று பொய் என்பது தெளிவாகிறது.

4(2) மேலும் மனுதாரர் மனுவுடன் தாக்கல் செய்துள்ள அபிடவிட்டில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் அடிப்படை ஆதாரமற்ற பொய்யான குற்றச்சாட்டுகள் ஆகும். மனுதாரரின் அபிடவிட்டில் காலஞ்சென்ற ராஜாத்தி அம்மாளின் உடன் பிறந்த சகோதரி சாந்தம் அவர்களின் மகன் இந்த மனுதாரர் (நடராஜன்) என்ற சொல்லியுள்ளார். அதற்காக ஆதாரம் ஏதும் மனுதாரர் தாக்கல் செய்யவில்லை. உரிய வாரிசு சான்று ஏதும் மனுதாரர் தாக்கல் செய்வில்லை. மனுதாரருக்கும் தாவா சொத்திற்கும் என்ன தொடர்பு என்பதை மனுதாரர் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்.

| | | |
|---|---|---|
| முதலாவதாக | – | சாந்தம் காலஞ்சென்ற ராஜாத்தியின் உடன் பிறந்த சகோதரி என்பதை மனுதாரர் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். |
| இரண்டாவதாக | – | மனுதாரர்/3ம் நபர் (நடராஜன்) சட்டப்படியான வாரிசு என்பதை நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். |
| மூன்றாவதாக | – | காலஞ்சென்ற ராஜாத்தி அம்மாள் 19.09.2020 தேதியில் எழுதிவைத்துள்ள உயில் பத்திரம் இந்த 1ம் எதிர்மனுதாரரால் நடைமுறைப்படுத்தப்பட்டு உயில் நடப்பில் இருந்து வருகிறது. உயில் ஆவணத்தை பொருத்து மனுதாரர்/3ம் நபர் பரிகாரம் ஏதும் கோரி நடவடிக்கை எடுக்க கடமைப்பட்டுள்ளார். உயில் பத்திரப்படி ராஜாத்திற்கு சொந்தமான இதர சொத்துக்களும் இந்த 1ம் எதிர்மனுதாரரால் அனுபவிக்கப்பட்டு வருகிறது. |
| நான்காவதாக | – | காலஞ்சென்ற ராஜாத்தி அம்மாள் 19.09.2020 தேதியில் எழுதிவைத்துள்ள உயில் பத்திரப்படி 1ம் எதிர்மனுதாரர் பெயரில் தாவா சொத்தில் சொத்து வரி மாற்றம் குடிநீர் வரி மாற்றம் மின்னிணைப்பு பெயர் மாற்றம் பட்டா பெயர் மாற்றம் அனைத்தும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதனை பொருத்து மனுதாரர்/3ம் நபர் நடவடிக்கை எதும் எடுக்கவில்லை |
| ஐந்தாவதாக | – | 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக விளம்புகை பரிகாரம் மற்றும் சொத்து சுவாதீன பரிகாரம் கோரி மனுதாரர் / 3ம் நபர் சட்ட நடவடிக்கை ஏதும் எடுக்கவேண்டும். மேற்கண்ட எந்தவிதமான சட்ட நடவடிக்கைகளும் மனுதாரர் / 3ம் நபர் எடுக்கவில்லை. ஆனால் கடந்த 28.07.2024 தேதியில் சொத்து சுவாதீனம் எடுத்துவிட்டதாக பொய்யாக சொல்லி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார். அதனால் மனுதாரரின் மனு |

J.Parimala Digitally signed by J.Parimala

சட்ட நிலையில் ஏற்புடையதல்ல. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும்.

**4(3)** மேலும் 2025 ம் ஆண்டு வரையில் தாவா சொத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் பெயரில் சொத்து வரி செலுத்தப்பட்டு அதற்கான கணிணி ரசீது வழங்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் இறந்துவிட்ட ராஜாத்தி அம்மாள் பெயரில் சொத்து வரி பெயர் மாற்றம் செய்யப்பட்டதாகவும் அதற்காக மனு அளித்துள்ளதகாவும் மனுதாரர் சொல்லியுள்ளது முற்றிலும் தவறாகும். 29.06.2024 தேதியில் தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு 1ம் எதிர்மனுதாரர் பெயரில் வீட்டு வரி கொடுக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் அதே சொத்திற்கு இரண்டாவதாக சொத்து வரி இறந்தவர் பெயரில் கொடுக்கப்பட்டுள்ளதாக மனுதாரர் சொல்லியுள்ளது சட்டநிலையில் ஏற்புடையதல்ல. தாவா புல எண் கொண்ட சொத்து தொடர்பாக இந்த 1ம் எதிர்மனுதாரர் பெயரில் வழங்கப்பட்டுள்ள பட்டா சிட்டா சொத்து வரி குடிநீர் வரி மின்னிணைப்பு பெயர் ஆகியவற்றை எந்தவிதமான பெயர் மாற்றமும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.146/2024 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணை நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில் சொத்து வரி பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று மனுதாரர் சொல்லியுள்ளது முற்றிலும் தவறாகும். மனுதாரர் வழக்கிற்காக ஆவணங்களை தயார் செய்துள்ளார் என்பது தெளிவாகிறது. இந்த 1ம் எதிர்மனுதாரரின் பெயரில் வழங்கப்பட்டு வந்த சொத்து வரியை எந்தவிதமான விசாரணையும் இல்லாமல் எந்தவிதமான முறையான ஆவணங்களும் இல்லாமல் பெயர் மாற்றம் செய்துள்ளதாக மனுதாரர் சொல்லியுள்ளது முற்றிலும் பொய்யாகும். வழக்கிற்காக அனைத்து ஆவணங்களையும் தயார் செய்து மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். கடந்த 11.07.1986 தேதியில் கும்பகோணம் வட்டாட்சியர் வழங்கிய வாரிசு சான்றினை நீதிமன்றத்தார் பரிசீலனை செய்ய வேண்டியது அவசியமாகிறது.

வட்டாட்சியரின் வாரிசு சான்று படி

பங்கஜத்தம்மாள் – ஜெகதீசன் தம்பதியருக்கு கீழ்கண்ட வாரிசுகள்

1. விஸ்வநாதன்
2. முத்துலெட்சுமி
3. ரகுநாதன்
4. சிவகாமிசுந்தரி
5. சத்தியபாமா
6. கிருஷ்ணமூர்த்தி
7. ராஜாத்தி
8. வேணுகோபால்

என்று வட்டாட்சியரின் வாரிசு சான்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. சாந்தம் என்ற பெயர் இடம்பெறவில்லை. மனுதாரர்/3ம் நபர் பொய்யாக கட்சியாடுகிறார். எந்தவிதமான அடிப்படை ஆதாரமும் இல்லாமல் பொய்யான காரணங்களுடன் மனுதாரர் தன்னை இந்த வழக்கில் பார்ட்டியாக சேர்க்க வேண்டும் என்ற இந்த Order 1 Rule 10(2) CPC மனுவினை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவினை அனுமதித்தால் இந்த 1ம் எதிர்மனுதாரருக்கு பெருத்த கஷ்டம் நஷ்டம் ஏற்படும். வாதியின் வழக்கு முற்றிலும் பாதிக்கப்படும். எனவே எந்தவிதமான அடிப்படை ஆதாரமும் இல்லாமல் மனுதாரர்/3ம் நபர் தாக்கல் செய்துள்ள மனுவினை 1ம் எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென கோருகிறார்.

J.Parimala Digitally signed by J.Parimala

**5. <u>பிரச்சினை</u>:**

இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

**6. <u>தீர்வு</u>:**

**6(1)** மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகளையும் எதிர்மனுதாரர் எதிருரையில் கூறியுள்ள சங்கதிகளையும் பரிசீலனை செய்ததில் இறந்துபோன ராசாத்தி அம்மாளுக்கும் அவருடைய கணவருக்கும் முதல்நிலை வாரிசுதாரர்கள் யாரும் இல்லை என்றும் அவருடைய அண்ணன் மகன்கள் 2ம் நிலை வாரிசுதாரர்கள் என்றும் அவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டுமென்றும் எடுத்துரைத்துள்ள நிலையில் எதிர்மனுதாரர் தரப்பில் ராசாத்தி அம்மாள் என்னுடைய பாதுகாப்பில் வைத்து பராமரித்து வந்ததாகவும் தாவா சொத்து குறித்து ராசாத்தி அம்மாள் எதிர்மனுதாரருக்கு உயில் எழுதி வைத்துள்ளதாகவும், அவருக்கு வாரிசுதாரர்கள் யாரும் இல்லை என்றும் இந்த மனுதாரர்கள் ராசாத்தி அம்மாளுக்கு வாரிசுதாரர்கள் இல்லை என்று எடுத்துரைத்துள்ளார். இந்த வழக்கில் இறந்துபோன ராசாத்தி அம்மாளுக்கு வாரிசுதாரர்கள் யாரு என்பதை பொருத்தும் இந்த மனுதாரர்களிடம் 2ம் நிலை வாரிசுதாரர்கள் என்பதை பொருத்தும் இந்த வழக்கின் முடிவில் மட்டுமே தீர்மானம் செய்ய இயலும் என்பதால் மனுதாரர்கள் இந்த வழக்கின் தீர்ப்பு அவர்களின் உரிமையை பாதிக்ககூடியதாக இருப்பதாலும் அசல் வழக்கிற்கு அனைத்து பிரச்சனைகளுக்கும் முழுமையான மற்றும் பயனுள்ள தீர்வு காண மனுதாரர்களின் தரப்பினர்களாக சேர்ப்பது அவசியமானது என நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவில்** இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தரிடம் நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்ச செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் 2026–ஆம் ஆண்டு ஜுலை மாதம் 23–ஆம் நாள் என்னால் பகரப்பட்டது.

J.Parimala Digitally signed by J.Parimala

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கும்பகோணம்.

**ORDER**
I.A. No.10/2026 in
O.S. No.140/2024
23.07.2026